கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 13.12.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைந்த பண்ணைய மையத்திற்கு தேசிய விருது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் மேலாண்மை இயக்குநரகத்தில் உழவியல் துறையின் கீழ் செயல்படும் அனைத்திந்திய ஒருங்கிணைந்த பண்ணைய முதன்மை மையம், தேசிய அளவில் மதிப்பு மிக்க சிறந்த மையத்திற்கான விருதைப் பெற்று குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டி உள்ளது. உத்திரப்பிரதேச மாநிலம் மீரட் மோடிபுரத்தில் உள்ள இந்திய வேளாண் அமைப்புகளின் ஒருங்கிணைந்த பண்ணைய ஆராய்ச்சி நிறுவனம், லூதியானாவின் பஞ்சாப் வேளாண் பல்கலைக்கழகத்தில் நடத்திய தேசிய அளவிலான ஒருங்கிணைந்த பண்ணை முறைகள் குறித்த கூட்டத்தில் இந்த விருதை வழங்கி கௌரவித்தது. மேலும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துவதில் தோட்டக்கால் சூழலுக்கேற்ற ஒருங்கிணைந்த பண்ணைய தொழில்நுட்பத்தை உருவாக்கியதற்காக சிறப்பு சான்றிதழையும் வழங்கி பெருமைப்படுத்தியது. இந்த தொழில்நுட்பம் இயற்கை பயன்பாட்டு திறனை அதிகரிக்கவும் மற்றும் விவசாயிகளின் இலாபத்தை மேம்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மகத்தான சாதனையை அங்கீகரிக்கும் வகையில், பயிர் மேலாண்மை இயக்குநர் முனைவர். எம்.கே.கலாராணி, உழவியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். பி.பரசுராமன் மற்றும் அகில இந்திய ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தின் குழுவினர்கள் முனைவர்.பி.எம்.சண்முகம், முனைவர்.கே.சிவசுப்பிரமணியன், முனைவர்.எஸ்.செந்தில்நாதன், முனைவர்.எஸ்.பி.சங்கீதா ஆகியோர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை சந்தித்தனர். துணைவேந்தர், குழுவின் முயற்சிகளைப் போற்றி ஒருங்கிணைந்த பண்ணைய நடைமுறைகளை முன்னேற்றுவதற்காகவும், நிலையான விவசாய உற்பத்தி மற்றும் வருமானத்தை உருவாக்க மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பதற்காகவும் அவர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டினார். இந்த, தேசிய

அளவிலான அங்கீகாரம், விவசாய சமூகத்திற்கு அதிநவீன ஆராய்ச்சி மற்றும் பயனுள்ள தீர்வுகளை வழங்குவதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைந்த பண்ணைய மைய ஆராய்ச்சி முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதாக விளங்குகின்றது.

பல்வேறு புதுமையான வேளாண் ஒருங்கிணைந்த பண்ணைய ஆராய்ச்சிப் பணிகளை அங்கீகரிக்கும் வகையில், நாட்டின் பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தப்படும் 30 அனைத்திந்திய ஒருங்கிணைந்த பண்ணைய மையங்களில், 2024 ஆம் ஆண்டிற்கான சிறந்த மையமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைந்த பண்ணைய மையத்திற்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

*மக்கள் தொடர்பு அலுவலர்*